2026 பிப்ரவரி மாதம் 18– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 136/2025

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18– ஆம் தேதி புதன்கிழமை

திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW1 – பாண்டியம்மாள் |
| கணவர் பெயர்: | பால்பாண்டி |
| ஊர்: | பழனிசெட்டிபட்டி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | இல்லத்தரசி |
| வயது : | 46 |

18.02.2026

(4, 8, 9 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 1, 2, 3, 5, 6, 7 எதிரிகளுக்காக பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு, ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை**:–

நான் தற்சமயம் தேனி மாவட்டம், தேனி தாலுகா, பழனிசெட்டிபட்டியில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன பால்பாண்டி என்பவர் என்னுடைய கணவர் ஆவார். என்னுடைய கணவர் வியாபாரம் செய்து வந்தார். 08.03.2015ம் தேதி எனது கணவர் இறந்துவிட்டார். எனது கணவருக்கு அடிக்கடி வயிற்று வலி வரும், 08.03.2015ம் தேதி எனது கணவர் வலி தாங்காமல் மருந்து குடித்துவிட்டார். அவர் வாந்தி எடுத்தவுடன் க.விலக்கு அரசு கல்லூரி மருத்துவமனைக்கு நானும், எனது மாமியாரும் அழைத்து சென்றோம், மருத்துவமனையில் அரை மணிநேரம் செய்த பின், மூக்கு வழியாக இரத்தம்

வந்தவுடன் இறந்துவிட்டதாக மருத்துவமனையில் கூறினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது, எனது மைத்துனர் சின்னப்பாண்டி புகார் மனுவை தயார் செய்தார். புகார் மனுவை படித்துப் பார்த்து கையொப்பம் இட்டேனா என்றால் இல்லை. எனது கணவர் இறந்தபின்பு நான் 2 மாதங்கள் சுயநினைவு இல்லாமல் மனவேதனையில் இருந்து வந்தேன். எனது மைத்துனர் புகார் மனுவை எழுதி என்னிடம் கையொப்பம் மட்டும் வாங்கினார். அவர் எதற்காக அவ்வாறு எழுதினார் என்று எனக்கு தெரியாது. புகாரில் நான் கையொப்பம் மட்டும் இட்டேன். அதிலுள்ள விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையதுதான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1–**ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது மைத்துனர் தனியாக அவர் குடும்பத்துடன் வாழ்ந்து வருகிறார். எதிரிகளுக்கும் எனது கணவர் இறப்பிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>சாட்சி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது கணவர் பால்வியாபாரமும், தேங்காய் வியாபாரமும் செய்து வந்தார் என்றால் சரிதான். எனது கணவர் 1 முதல் 10 எதிரிகளிடம் கடன் வாங்கினார் என்றும், 1வது எதிரி ராஜாவிடமிருந்து ரூ.20 லட்சம் கடனும், 3வது எதிரி மணிமாறனிடம் ரூ.36,80,000/–மும், 5வது எதிரி மகேந்திரனிடமிருந்து ரூ.10 லட்சம் ரூபாயும், 7வது எதிரி ஜெயமணியிடமிருந்து ரூ.9 லட்சம் ரூபாயும் கடனாக பெற்றிருந்தார் என்றால் சரியல்ல. 8வது எதிரி கருப்பத்தேவன், 9, 10வது எதிரிகளிடமிருந்தும் பால்வியாபாரம் செய்வதற்காக கடன் வாங்கினார் என்றும், 8 முதல் 10 வரையிலான எதிரிகள் அடிக்கடி எனது கணவரிடம் பணம் கேட்டு அடிக்கடி தொந்தரவு செய்து வந்தார்கள் என்றும், மேற்படி கடன் தொகைக்காக அதிகப்படியான வட்டியை எதிரிகள் எனது கணவரிடம் கேட்டதாகவும், வட்டிப்பணத்தை செலுத்தவில்லை என்றால் தற்கொலை செய்து இறந்துபோடா என்று எதிரிகள் அனைவரும் மிரட்டியதாகவும், அந்த மனஉளைச்சலில் எனது

கணவர் பூச்சிக்கொல்லி மருந்தை குடித்துவிட்டு, இறந்துவிட்டார் என்றும், எதிரிகள் அனைவரும் மிரட்டினார்கள் என்றும், அதனால் எனது கணவர் மருந்து குடித்துவிட்டு எதிரிகளின் தூண்டுதலின்பேரில் தற்கொலை செய்துக்கொண்டார் என்றும், சம்பவம் சம்பந்தமாக 08.03.2015 ம் தேதி பழனிசெட்டிபட்டி காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்து, எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், நான் கொடுத்த புகாரின் பேரிலும், போலீசார் விசாரணையின்போது நான் கொடுத்த வாக்குமூலத்தை வைத்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்கள் என்றும் எனது போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகளும் நானும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதாலும், எதிரிகளுடன் சமரசம் செய்துக்கொண்டதால் தற்போது எதிரிகளுக்கு சாதகமாகவும், எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>1 முதல் 8 மற்றும் 10 வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

எதிரிகள் யாரும் எந்த சமயத்திலும் எனது வீட்டிற்கு வந்து பணம் கேட்டு மிரட்டவில்லை என்றால் சரிதான்.

<u>9 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

எதிரிகள் யாரும் எந்த சமயத்திலும் எனது வீட்டிற்கு வந்து பணம் கேட்டு மிரட்டவில்லை என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை</u> :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 18.02.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.18 18:38:28 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
18.02.2026

**2026 பிப்ரவரி மாதம் 18– ஆம் தேதி புதன்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**S.C. நெம்பர் : 136/2025**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18– ஆம் தேதி புதன்கிழமை

திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW2 – கோகுல்பாண்டியன் |
| தகப்பனார் பெயர்: | பால்பாண்டி |
| ஊர்: | பழனிசெட்டிபட்டி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | மாணவர் |
| வயது : | 24 |

18.02.2026

(4, 8, 9 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 1, 2, 3, 5, 6, 7 எதிரிகளுக்காக பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட சார்பு ஆய்வாளர் திரு.நாச்சிமுத்து அவர்களால் அடையாளம் காணப்பட்டு, ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தற்சமயம் தேனி மாவட்டம், தேனி தாலுகா, பழனிசெட்டிபட்டியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது தாயார் ஆவார். இறந்துபோன பால்பாண்டி என்பவர் எனது தந்தை ஆவார். எனது தந்தை விவசாயம், பால்வியாபாரமும் செய்து வந்தார். கடந்த 08.03.2015 ம் தேதி எனது தந்தை இறந்துவிட்டார். எனது தந்தை விஷம் குடித்து இறந்துவிட்டார். தேனி அரசு கல்லூரி

மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளித்தோம், சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். எனது தந்தை எதற்காக மருந்து குடித்தார், எவ்வாறு இறந்தார் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது தந்தை பால்வியாபாரமும், தேங்காய் வியாபாரமும் செய்து வந்தார் என்றால் சரிதான். எனது தந்தை 1 முதல் 10 எதிரிகளிடம் கடன் வாங்கினார் என்றும், 1வது எதிரி ராஜாவிடமிருந்து ரூ.20 லட்சம் கடனும், 3வது எதிரி மணிமாறனிடம் ரூ.36,80,000/–மும், 5வது எதிரி மகேந்திரனிடமிருந்து ரூ.10 லட்சம் ரூபாயும், 7 வது எதிரி ஜெயமணியிடமிருந்து ரூ.9 லட்சம் ரூபாயும் கடனாக பெற்றிருந்தார் என்றால் சரியல்ல. 8வது எதிரி கருப்பத்தேவன், 9, 10வது எதிரிகளிடமிருந்தும் பால்வியாபாரம் செய்வதற்காக கடன் வாங்கினார் என்றும், 8 முதல் 10 வரையிலான எதிரிகள் அடிக்கடி எனது தந்தையிடம் பணம் கேட்டு அடிக்கடி தொந்தரவு செய்து வந்தார்கள் என்றும், மேற்படி கடன் தொகைக்காக அதிகப்படியான வட்டியை எதிரிகள் எனது தந்தையிடம் கேட்டதாகவும், வட்டிப்பணத்தை செலுத்தவில்லை என்றால் தற்கொலை செய்து இறந்துபோடா என்று எதிரிகள் அனைவரும் மிரட்டியதாகவும், அந்த மனஉளைச்சலில் எனது தந்தை பூச்சிக்கொல்லி மருந்தை குடித்துவிட்டு, இறந்துவிட்டார் என்றும், எதிரிகள் அனைவரும் மிரட்டினார்கள் என்றும், அதனால் எனது தந்தை மருந்து குடித்துவிட்டு எதிரிகளின் தூண்டுதலின்பேரில் தற்கொலை செய்துக்கொண்டார் என்றும், சம்பவம் சம்பந்தமாக 08.03.2015ம் தேதி பழனிசெட்டிபட்டி காவல்நிலையத்தில் எனது தாயார் புகார் கொடுத்து, எதிரிகள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனது தாயார் கொடுத்த புகாரின் பேரிலும், போலீசார் விசாரணையின்போது எனது தாயார் கொடுத்த வாக்குமூலத்தை வைத்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல்

செய்தார்கள் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகளும் நாங்கள் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதாலும், எதிரிகளுடன் சமரசம் செய்துக்கொண்டதால் தற்போது எதிரிகளுக்கு சாதகமாகவும், எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 8 மற்றும் 10 வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

எதிரிகள் யாரும் எந்த சமயத்திலும் எனது வீட்டிற்கு வந்து பணம் கேட்டு மிரட்டவில்லை என்றால் சரிதான்.

**9 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

எதிரிகள் யாரும் எந்த சமயத்திலும் எனது வீட்டிற்கு வந்து பணம் கேட்டு மிரட்டவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 18.02.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.18 18:38:35 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
18.02.2026